

நேற்று (26.06.2023) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் ஆய்வின்போது உடனிருந்தனர்.

தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமை அலுவலகத்தில்

# மின் உற்பத்தி செய்யப்படும் அளவு குறித்து ஆய்வு!

## மின் பகிர்ந்தளிப்பு மையத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு கேட்டறிந்தார்!

சென்னை, ஜூன் 27-

சென்னை, தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தை நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று ஆய்வு செய்தார்.

மேற்கண்ட ஆய்வின் போது, அமைச்சர் தமிழ்நாட்டில் அனல், புனல், காற்றாலை, சூரிய மின்சக்தி மற்றும் எரிவாயு மின் உற்பத்தி நிலையங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சாரத்தின் அளவு பற்றி கேட்டறிந்தார்.

மேலும், மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தின் முக்கிய பணிகளான மின் சுமை மற்றும் மின் உற்பத்தியை சமநிலை செய்து மின் விநியோகம் செய்தல், மாநில மின்கட்டமைப்பின் பாதுகப்பான திட்டமிடல் மற்றும் பொருளாதார செயல்பாடுகள், அதிர்வெண்ணை 49.90 Hz முதல் 50.05 Hz வரம்பிற்குள் பராமரித்தல், விலகல் வரம்பினை 200 மெகாவாட் வரம்பிற்குள் பராமரிப்பது உள்ளிட்ட செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மின்சாரத்தினை தடையின்றி வழங்குவதை கண்காணிப்பதற்கென பிரத்தியேகமாக இயங்கி வரும் (SCADA) கட்டுப்பாட்டு மையத்தினையும் ஆய்வு மேற்கொண்டு, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளின் மின் தேவை குறித்து கேட்டறிந்தார்.

மேலும், மாநிலத்தின் தற்போதைய மின்நுகர்வினை கருத்திற்கொண்டு எவ்வித தடங்கலுமின்றி அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் 24X7 மணி நேரமும் தடையில்லா சீரான மின்சாரம் வழங்கிடவும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு துரிதமாக செயல்பட்டு மின் பழுதுகள் ஏற்படின் அவற்றை உடனுக்குடன் சரி செய்து சீரான மின்சாரத்தினை பாதுகாப்பான முறையில் அனைத்து மின் நுகர்வோர் களுக்கும் வழங்கிடவும் நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும்

# சென்னை பள்ளிகளில் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டும் நிகழ்ச்சி!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 27-

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இன்னர் வீல் கிளப் ஆஃப் மெட்ராஸ் இணைந்து ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நேற்று (26.06.2023) நடைபெற்ற சென்னை பள்ளிகளில் பயிலும் 12-ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சியினை (Career Guidance Programme) மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கிவைத்து, மாணவ, மாணவியருக்கு உயர்கல்விக்கான வழிகாட்டி புத்தகத்தினை வழங்கி உரையாற்றினார்.

மேயர் அவர்களின் 2023-24-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண்.24ன் படி, 2023-24ஆம் கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் 10 மற்றும்

12-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் பள்ளிப் படிப்பிற்கு பின் அவர்களின் எதிர்கால கல்வி மற்றும் வேலை வாய்ப்பினை பற்றி அறிந்து முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு வழிகாட்டும் விதமாக, தொடர்புடைய துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் சிறந்து விளங்கும் முன்னாள் மாணவர்களின் வாயிலாக வழிகாட்டுதல் நிகழ்ச்சி (Career Guidance Programme) நடத்தப்படும் எனஅறிவிக்கப்பட்டது.

மேயர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, 2023-24-ஆம் கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு பள்ளிப் படிப்பிற்கு பின் அவர்களின் எதிர்காலக் கல்வி மற்றும் வேலை வாய்ப்பினை பற்றி அறிந்து முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு வழிகாட்டும் விதமாக, சாம்ஸ்கிரியா பவுண்டேஷன் (Samskriya Foundation) மூலம் வழிகாட்டுதல் நிகழ்ச்சி (Career Guidance Programme) 26.06.2023 மற்றும் 27.06.2023 ஆகிய இரண்டு நாட்களுக்கு மதியம் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நேரடி நிகழ்ச்சியாகவும் (Offline Programme), செனாய் நகரில் உள்ள அம்மா அரங்கம் மற்றும் தியாகராய நகரில் உள்ள சர். பிட்டி தியாகராயர் அரங்கத்திலும் ஆன்லைன் நிகழ்ச்சியாகவும் (Online Programme) இன்று தொடங்கி வைக்கப்பட்டது.

நேற்று (26.06.2023) நடைபெற்ற வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கூட்டரங்கில் 7 சென்னை பள்ளிகளைச் சார்ந்த 431 மாணவர்கள், செனாய் நகர் அம்மா அரங்கத்தில் 13 சென்னை பள்ளிகளைச் சார்ந்த 431 மாணவர்கள் மற்றும் தியாகராய நகர் சர்.பிட்டி தியாகராய அரங்கில் 9 சென்னை பள்ளிகளைச் சார்ந்த 324 மாணவர்கள் என மொத்தம் 1186 உயிரியல் பாடப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இன்று (27.06.2023) நடைபெற உள்ள நிகழ்ச்சியில் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கூட்டரங்கில் 456 மாணவர்கள், செனாய் நகர் அம்மா அரங்கத்தில் 353 மாணவர்கள் என மொத்தம் 809 கணினி அறிவியல் பாடப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைய உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், கல்வி அலுவலர் (பொ) திருமதி சாந்தி, இன்னர் வீல் கிளப் நிர்வாகிகள் திருமதி சந்தியா ஜெயச்சந்திரன், திருமதி ஜவந்தி சிங்காரம், திருமதி அரசி பொன்மொழி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு

# தாம்பரம் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - புதுக்கோட்டை விஜயா சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன்.27

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு பொதுக்கூட்டம் இன்று (27.6.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, யஸ்வந்த் நகர், மாடம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

தாம்பரம் கிழக்கு பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் தலைமை வகிக்கிறார்.

பகுதி துணைச் செயலாளர் இ.எம்.சாம்சன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பொன்.சதாசிவம், வி. ஜெயராமன், டி.ராஜாராம், எஸ்.விமலா, ரா.நவீன், ஆர். பன்னீர்செல்வம், ஜெ.செல்வம், எஸ்.வேலவன், பொ. செந்தில்குமார், ராமதேவி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் க.வசந்தகுமாரி, கோ.காமராஜ், எஸ்.சேகர், திருநீர்மலை த.ஜெயக் குமார், ஆதிமாறன், எஸ்.இந்திரன், இரா.சுரேஷ், அ. தமிழ்மாறன், எஸ்.சதீஷ், க.தேவேந்திரன், ஆர்.எஸ். சங்கர், வ.விஜயரங்கன், பேராசிரியர் எல்.பிரபு, சி. கே.ஜெகதீஸ்வரன், டி.புருஷோத்தமன், ஜெ.சத்தியசீலன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாநகரப் பிரதிநிதி எம். செந்தில்குமார் நன்றி கூறுகிறார்.

சென்னை மாநகராட்சி

# சொத்துவரியை செலுத்தாதவர்கள் உடனடியாக செலுத்துக!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 27-

சொத்துவரியானது, பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதான வருவாய் ஆகும். இதன் மூலமே, சென்னை மாநகருக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகள், சுகாதார தூய்மைப் பணிகள், திடக்கழிவுகள் அகற்றுதல், தெரு விளக்குகள், பூங்காக்கள் மற்றும் சாலைகள் பராமரித்தல், பொது சுகாதாரம் நோய் தடுப்பு பணி போன்ற அத்தியாவசிய பணிகள் முதலியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசால், அரசாணை எண்.44, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:12.04.2023ல், தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1998, வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டம் 13.04.2023 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப் பெற்றுள்ளது.

அரசாணை எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:12.04.2023ன் படி, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, உருவாக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 268 (3)ல் "In case the halfyearly property tax is not paid within such halfyear, i.e. by end of September or by the end of March, as the case may be, in addition to the halfyearly property tax due, the municipality shall levy interest at the rate of one per cent simple interest per month on the owner or occupier as the case may be, for such halfyearly tax, until it is paid." என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சட்ட விதியின் படி, அரையாண்டு காலத்திற்குரிய சொத்துவரியினை செலுத்தாதவர்கள் அதாவது கடந்த 2/202223 ஆம் அரையாண்டுக்குரிய சொத்துவரியை மார்ச் 31ம் தேதிக்குள் செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள வரித் தொகை மீது, மாதத்திற்கு 1 சதவீதம் தனிவட்டியுடன் சேர்த்து செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 13 லட்சத்திற்கும் மேற்பட்ட சொத்து உரிமையாளர்களில், தற்போது நிலுவை சொத்துவரி செலுத்தாத 3.50 லட்சத்திற்கு மேற்பட்ட சொத்து உரிமையாளர்களின் நிலுவை வரித் தொகை மீது, மேற்படி சட்ட விதிகளின்படி 1 சதவீதம் தனிவட்டி விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்ட விதிகளின்படி, முந்தைய அரையாண்டு காலம்வரையில் செலுத்தாத நிலுவை வரித் தொகை மீது, நடப்பு அரையாண்டின் ஒவ்வொரு மாதமும் 1 சதவீதம் தனிவட்டி விதிக்க வழிவகை உள்ளதால், சொத்து வரி உரிமையாளர்கள் நிலுவை சொத்து வரியினை எவ்வித சிரமமின்றி, கீழ்கண்ட வழிமுறைகள் மூலம் எளிதாக செலுத்தலாம்.

வரிவசூலிப்பாளர்களின் மூலமாக, Swipingவசதியுடன் கூடிய கையடக்கக் கருவி உதவியுடன், கடன் மற்றும் பற்று அட்டைகள் (Credit and Debit) மூலமாக செலுத்தலாம்.

மண்டலம்/வார்டு அலுவலகங்களில் அமைந்துள்ள இசேவை மையங்களில் சொத்துவரி செலுத்தலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஒப்பந்தம் இயற்றியுள்ள குறிப்பிட்ட வங்கிகளில், நேரடியாக பணமாக செலுத்தலாம்.

'நம்ம சென்னை' Mobile App மற்றும் 'பேடிஎம்' Mobile App - முதலிய கைப்பேசி செயலி மூலமாக செலுத்தலாம்.

BBPS (Bharat Bill Payment System) என்ற சேவை மூலமாகவும் சொத்துவரி செலுத்தலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணைய தளம் www.chennaicorporation.gov.in வாயிலாக, இணைய வழி செலுத்துதல் (Online payment) மூலம், பரிமாற்றக் கட்டணம் இல்லாமல் (Nil transaction fee) செலுத்தலாம்.

சொத்து உரிமையாளர்களின் சொத்துவரி சீட்டில் இடம்பெற்றுள்ள QR Code Scanning உதவியுடன் சொத்துவரியினை செலுத்தலாம்.

வருவாய் துறை தலைமையிடத்தில், நிறுவப்பட்டுள்ள KIOSK என்ற தானியங்கி கருவின் மூலம், சொத்து உரிமையாளர்கள் தங்களது சொத்துவரி காசோலையினை எளிதாக செலுத்தி, சொத்துவரி ரசீதுகளை பெறலாம்.

எனவே, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன்டி, 2/202223 ஆம் அரையாண்டுக்குரிய சொத்துவரியை, கடந்த மார்ச் 31ம் தேதிக்குள் செலுத்தாத சொத்து உரிமையாளர்கள் மற்றும் நீண்ட காலமாக சொத்துவரி செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள சொத்து உரிமையாளர்கள்/ உபயோகிப்பாளர்கள், தற்போது, செலுத்த வேண்டிய நிலுவை சொத்துவரியினை மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் உடனடியாக செலுத்தி, மேற்படி சட்ட விதிகளின்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மீது, மாதம் தோறும் விதிக்கப்படவுள்ள 1 சதவீதம் தனிவட்டி விதிப்பினை தவிர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.



சென்னை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாக கூட்டரங்கில் நேற்று (26.06.2023) வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள், நிர்வாகம் (ம) தணிக்கை மாவட்ட பதிவாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) மற்றும் தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) ஆகியோர்களின் மே–2023 மாதத்திற்கான பணி சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி.பா. ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை கருவனூர் கிராம சம்பவத்தில்

# எடப்பாடி பழனிசாமி உண்மைக்குப் புறம்பாக பேசுவதா?

## அமைச்சர் பி.மூர்த்தி கேள்வி!



சென்னை, ஜூன் 27-

மதுரை மாவட்டம் கருவனூர் கிராமத்தில் ஏற்பட்ட சம்பவம் குறித்து எடப்பாடி பழனிசாமி உண்மைக்கு புறம்பாக பேசியுள்ளார் என்றும், பத்திரப்பதிவுத்துறையில் காலியாக உள்ள 85 பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (26.06.2023) சென்னை நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் அனைத்து துணை பதிவுத் துறை தலைவர்கள், நிர்வாக மாவட்ட பதிவாளர்கள் நிர்வாகம், தணிக்கை மாவட்ட பதிவாளர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் (முத்திரை) மற்றும் தனி துணை ஆட்சியர்கள் (முத்திரை) பணி சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது .

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு அமைச்சர் மூர்த்தி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

பதிவு துறையின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்கியுள்ளார். அந்த வகையில் சார்பதிவாளர் அலுவலகத்தின் வருவாயை உயர்த்துவதற்கு எந்த வகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து மாவட்ட பதிவாளர் தணிக்கை மற்றும் துணை தலைவர்கள் உடன் இன்று ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் கட்டடங்களுக்கு உரிய விலையை நிர்ணயிக்க வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள பத்திரங்களை உடனுக்குடன் முடித்து வருவாய் ஈட்ட வேண்டும் என்று அறிவுரை வழங்கி உள்ளோம். பத்திரங்கள் பதியப்படும் போது பொதுமக்கள் அதிக நேரம் காத்திருக்காத வண்ணம் உடனுக்குடன் பத்திரங்களை பதிவு செய்யும் வகையில் 3.0 மென்பொருளை பயன்படுத்தி குறைபாடுகளை களைவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டு வருகிறது.

தவறான செய்திகள் பரப்புவதை தடுக்கும் வகையிலும் நேர்மையான முறையில் பதிவு நடைபெறும் வகையிலும் இடைத்தரகர்கள் பத்திரப்பதிவு நடைபெறும் இடத்தில் இருக்க கூடாது என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

காலி பணியிடங்களை நிரப்பும் வகையில் பத்திரப் பதிவுத் துறையில் டி.என். பி.எஸ்.சி. தேர்வு முறையில் காலி பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. பத்திரப்பதிவுத்துறையில் காலியாக உள்ள 85 பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாஜக எம்.எல்.ஏ. நயினார் நாகேந்திரன், அவருடைய மகன் நயினார் பாலாஜி மற்றும் பத்திரப்பதிவு, வருவாய் துறை அலுவலர் சேர்ந்து சென்னை ஆற்காடு சாலையில் உள்ள ரூ.100 கோடி மதிப்பிலான சொத்தை மோசடி பத்திரப் பதிவு செய்ததாக எழுந்துள்ள புகார் குறித்து விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது 15 நாட்களில் புகார் மீது அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரை மாவட்டம் கருவனூர் கிராமத்தில் நடைபெற்ற கைகலப்பு குறித்து பேசிய அமைச்சர், மதுரை மாவட்டம் கருவனூர் கிராமத்தில் ஏற்பட்ட சம்பவம் ஒரே சமூகத்தினர் இடையே பிரச்சினையால் ஏற்பட்ட மோதல். இச்சம்பவம் தொடர்பாக காவல்துறை அதிகாரிகள் பாகுபாடின்றி வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கோவிலில் திருவிழா முடிந்த மறுநாள்தான் நான் அங்கு சென்றேன். நான் செல்லும்போது அங்கு எந்த பிரச்சினையும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி பேட்டியளித்தார்.

# திருநெல்வேலி தொகுதி கழக மக்களவை உறுப்பினர் சா.ஞானதிரவியம் அவர்களிடம் விளக்கம் கேட்டு

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் கடிதம்

திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி கழக உறுப்பினர் திரு.சா.ஞானதிரவியம் அவர்கள், கழக வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் - கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் செயல்படுவதாகவும் தலைமைக் கழகத்திற்கு புகார் வரப்பெற்றுள்ளதால்,

அவரது இச்செயல் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் உள்ளதால், இதுகுறித்த அவரது விளக்கத்தினையும் – செயல்பாடுகளையும் இக்கடிதம் கிடைத்த ஏழு நாட்களுக்குள் தலைமைக் கழகத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிவிக்க வேண்டுமெனவும், அப்படி தெரிவிக்க தவறும் பட்சத்தில், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

'அண்ணா அறிவாலயம்'
சென்னை 18.
நாள் 26-06-2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இன்னர் வீல் கிளப் ஆஃப் மெட்ராஸ் இணைந்து ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நேற்று (26.06.2023) நடைபெற்ற சென்னை பள்ளிகளில் பயிலும் 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சியினை (Career Guidance Programme) மேயர் திருமதி ஆர். பிரியா தொடங்கி வைத்து, மாணவ, மாணவியருக்கு உயர்கல்விக்கான வழிகாட்டிப் புத்தகத்தினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், கல்வி அலுவலர் (பொ) திருமதி சாந்தி, இன்னர் வீல் கிளப் நிர்வாகிகள் திருமதி சந்தியா ஜெயச்சந்திரன், திருமதி ஜவந்தி சிங்காரம், திருமதி அரசி பொன்மொழி உள்பட பலர் கலந்து கொண்டனர்.